**அக்டோபர்: 27**

## பேதுருவின் முதல் சுவிஷேத்தில் 3000 பேர் மனந்திரும்பி இரட்சிக்கபட்டனர்.

**வாசிக்க: அப்போஸ்தலர் 2:36-42**

பேதுரு தேவவல்லமையில் நிரம்பி அங்கே கூடியிருந்த ஜனங்களை பார்த்து, நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான். இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து; சகோதரரே, நாங்கள் என்னசெய்யவேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி, இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி, மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள் என்றும் புத்திசொன்னான். அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.




தேவனுடைய மகத்துவங்களை பார்த்து எல்லோரும் ஸ்தம்பித்து நின்று கொண்டிருக்கும்போதே 3000 பேர்கள் அந்த கூட்டத்திலிருந்து மனந்திரும்பி ஆண்டவரை தங்கள் இரட்சகராக ஏற்று கொண்டனர். சாதாரண மீனவரான பேதுரு ஆண்டவருடைய சுவிசேஷத்தை பாரத்தோடும், அதிகாரதாதோடும் எப்படி பிரசங்கித்தார் என்பது இன்னொரு அதிசயம். இதற்கு ஏதாவது சூத்திரமுள்ளதா (அ) தந்திரம் செய்ய வேண்டுமா? என தியானிக்கையில் தேவன் காண்பித்த இரண்டு காரியத்தை நாம் இன்று பார்க்கலாம்.
1) சாதாரண நம்பிக்கை (விசுவாசம்)
2) விசுவாசத்திற்கு கீழ்படிதல். இயேசப்பா சீஷரிடம், எருசலேமில் காத்திருந்து, பரிசுத்த ஆவியானவரை பெற்று, பின் ஜனங்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்க சொன்னார். சீடர்களும் காத்திருந்தனர், பரிசுத்த ஆவியினவரை பெற்று கொண்டு அங்கே வந்த எல்லா ஜனத்திற்கும் சுவிசேஷத்தை பிரசங்கித்தார். அங்கே ஆண்டவர் உடனே நம் கிரியை செய்தார். எனவே நீங்களும் இனிமேல் விசுவாசித்து கீழ்படிய உங்களை அர்பணிப்பீர்களா?

உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்.
1தெசலோனிக்கேயர் 5:24

## ஜெபம்

பரிசுத்தமுள்ள எங்கள் தகப்பனே, நீர் வாக்குபண்ணியதை நிறைவேற்ற உண்மையுள்ளவராதலால், நன்றி ஐய்யா. என்னை விசுவாசத்தில் வல்லவனாக, கீழ்ப்படிதலில் உண்மை உள்ளவனாக மாற்றும். இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.

